# Tamil Nadu Open University

## School of Education

Chennai – 600 015

B.Ed. Application & Prospectus - 2016

1. Method of Receiving Application :

The Cost of Application form for B.Ed. Admission is Rs.500/-.

The application form can be obtained either in person or by post.

a) The Application form and Prospectus can be directly obtained in person either from the University Head Office or University Zonal Centres or B.Ed. Programme Study Centres by way of Cash or Demand Draft for Rs.500/- drawn in favour of "Tamil Nadu Open University" payable at Chennai.

b) Those who wish to get the Application form and Prospectus by post should send a Demand Draft for Rs.550/- drawn in favour of "Tamil Nadu Open University" payable at Chennai to "The Registrar, Tamil Nadu Open University, 577 Anna Salai, Saidapet, Chennai-600 015."

Please write the following details on the back side of the Demand Draft in capital letters :

| | | |
|---|---|---|
| Name of the Applicant | : | |
| Programme | : | B.Ed. |
| Address with Phone No. | : | |

2. Eligibility :

a) The candidates should have passed the UG degree examination in 11+1+3 or 10+2+3 stream.

b) Trained In-service teachers with D.T.Ed. in any Government recognised school within Tamil Nadu state.

c) The candidates who have completed a NCTE recognised teacher education programme through face-to-face mode.

3. Application forms can be obtained from the following Programme Study Centres and Zonal Centres of TNOU :

| B.Ed. Programme Study Centres | | |
|---|---|---|
| Sl. No. | Name & Address | Contact Nos. |
| 1. | St. Ignatius College of Education,<br>Palayamkottai,<br>Tirunelveli – 627 002, | 0462-2560558 |
| 2. | Centwin College of Education,<br>300,Poolavadi Road, Ellis Nagar (Po),<br>Dharapuram (TK), Tirupur (Dist),<br>Tamilnadu, India - 638657 | 04258–230111 |
| 3. | Uma Maheswaranar College of Education,<br>Karanthai Tamil Sangam,<br>Karanthai, Thanjavur-613 002, | 04362-254449 |
| 4. | Crescent College of Education,<br>Somasipadi,<br>Tiruvannamalai-606 611, | 04175-249213 |
| 5. | Kasthooribha Gandhi College of Education,<br>1/220A, Nethaji Road,<br>Masakalipatty, (PO)<br>Rasipuram (TK), Nammakkal-637 401 | 0424-231169/231589 |
| 6. | Kapi College of Education,<br>7/14-A, Wellington Road,<br>NGGO Colony,<br>Nagamalai, Madurai-625 019 | 0452-2459339 |
| 7. | Rasi College of Education,<br>25/1B, Sendhamangalam Pirivu Road,<br>C.S. Puram (Po), Rasipuram(TK)<br>Namakkal Dist-637 401. | 04287-223026 |
| 8. | Bhavani College of Education,<br>Main Road, K.N. Pettai,<br>Thiruvanthipuram,<br>Cuddalore Dist-607 401 | 04142-287208 |

| Zonal Centres | | |
|---|---|---|
| Sl.No. | Name & Address | Contact Nos. |
| 1. | S.N.R Sons College,<br>SNR College Road,<br>Coimbatore - 641 006. | 0422-2565588<br>9943596043/8903600718 |
| 2. | Tamil Nadu Open University – Zonal Centre,<br>No.17/33, Dr. Dharmalingam Road,<br>Opp. to Avvaiyar Govt. Girls Hr. Sec. School<br>Dharmapuri – 636 701. | 04342-266980<br>9489766049/9884811268 |
| 3. | Tamil Nadu Open University – Zonal Centre<br>Plot No.300, Near TV Station,<br>K.K. Nagar,<br>Madurai – 625 020. | 0452-2695166<br>9629281166/9787226826 |
| 4. | Shivani College of Engineering and Technology,<br>Trichy Dindugul Highway,<br>Navaloor Kuttapattu,<br>Trichy – 620 009. | 9865602296/9486640005 |

4. Important Dates (Tentative) :

| | | | |
|---|---|---|---|
| a) | Starting date for the issue of Application and Prospectus | ... | 14.10.2015 |
| b) | Last date for issue of Application and Prospectus | ... | 30.11.2015 (5.00 p.m.) |
| c) | Last date for the submission of filled-in Application forms to TNOU's office | ... | 30.11.2015 (5.30 p.m.) |
| d) | Announcement of Admission Results | ... | 11.12.2015 |
| e) | Starting date of B.Ed. Admission Counselling | ... | January 2016 |

5. B.Ed. Prospectus – 2016

***

# இளநிலைக் கல்வியியல் (பி.எட்.)

**தமிழ் மற்றும் ஆங்கிலம் பயிற்று மொழி**

**(தொலைநிலை முறை)**

# Bachelor of Education (B.Ed.)

**Tamil and English Medium**

**(Distance Mode)**

## விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கக் கையேடு

## ஜனவரி 2016

## Application Form and Prospectus

## January 2016

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

## TAMIL NADU OPEN UNIVERSITY

## School of Education

**577, Anna Salai, Saidapet, Chennai-600 015**

**www.tnou.ac.in**

**Application Cost : Rs.500/-**

# TAMIL NADU OPEN UNIVERSITY


| | | |
|---|---|---|
| **Chancellor** | : | **Shri. Dr. KONIJETI ROSAIAH**<br>His Excellency,<br>The Governor of Tamil Nadu |
| **Pro-Chancellor** | : | **Thiru. P. PALANIAPPAN**<br>Hon'ble Minister for Higher Education,<br>Tamil Nadu. |

| | | |
|---|---|---|
| **Vice-Chancellor** | : | **Dr. (Mrs.) CHANDRAKANTHA JEYABALAN** |
| **Registrar** | : | **Dr. S. VIJAYAN** |
| **Controller of Examinations** | : | **Dr. A. MOHAMED JAFFAR** |
| **Finance Officer** | : | **Mr. N.S. MOHAN** |


## SCHOOL OF EDUCATION - FACULTIES


| | | |
|---|---|---|
| Dr. K.S. Premila | - | Associate Professor and Head i/c |
| Mr. T. Sampathkumar | - | Assistant Professor |
| Dr. D. Vinodhkumar | - | Assistant Professor |
| Dr. K.S. Ramakrishnan | - | Assistant Professor |
| Dr. P. Rajasekaran | - | Assistant Professor |
| Dr. D. Sumathi | - | Assistant Professor |
| Dr. C. Barathi | - | Assistant Professor |
| Dr. P. Pandia Vadivu | - | Assistant Professor |
| Dr. A.S. Arul Lawrence | - | Assistant Professor |

## பொருளடக்கம்


| வ.எண். | | தலைப்பு | பக்கஎண் |
|---|---|---|---|
| 1. | | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் | 1 |
| | 1.1 | அறிமுகம் | 1 |
| | 1.2 | பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் | 1 |
| | 1.3 | பல்கலைக்கழகப் பள்ளிகள் | 2 |
| 2. | | கல்வியியல் பள்ளி | 3 |
| 3. | | இளநிலைக் கல்வியியல் | 3 |
| | 3.1 | பி.எட்.படிப்பின் நோக்கங்கள் | 4 |
| | 3.2 | பி.எட். படிப்பிற்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விளக்கக் கையேடு வெளியீடு | 4 |
| | 3.3 | படிப்புக் கால அளவு | 4 |
| | 3.4 | பயிற்று மொழி மற்றும் தேர்வுகள் | 4 |
| | 3.5 | சேர்க்கை எண்ணிக்கை | 5 |
| | 3.6 | தகுதி மற்றும் சேர்க்கை விதிமுறைகள் | 5 |
| | 3.6.1 | கல்வித் தகுதி | 5 |
| | 3.6.2 | இடஒதுக்கீடு | 12 |
| | 3.6.3 | தரவரிசைப் பட்டியல் | 12 |
| | 3.7 | கல்விக்கட்டணம் | 15 |
| | 3.7.1 | பி.எட். கல்விக்கட்டணம் | 15 |
| | 3.7.2 | பி.எட். மாற்றுத்திறனாளிக்கான கல்விக்கட்டணம் | 16 |
| | 3.7.3 | வங்கி வரைவோலை குறித்த விவரங்கள் | 16 |
| | 3.7.4 | கட்டணத் தொகையைத் திருப்பியளித்தல் மற்றும் திருத்தியமைத்தல் | 16 |
| 4. | | கல்வி மைய ஒதுக்கீடு | 17 |
| | 4.1 | பி.எட். மாணவர்களுக்கு கல்வி மையங்கள் ஒதுக்கீடு | 17 |
| | 4.2 | கல்வி மையங்கள் | 17 |
| | 4.3 | கல்வி மையங்களில் வகுப்புகள் | 18 |
| 5. | | மாணவர் சேர்க்கைக்கான அழைப்புக் கடிதம் | 18 |
| | 5.1 | மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு | 19 |
| 6. | | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி | 21 |
| 7. | | முழுமையாக நிரப்பப்படாத மற்றும் காலதாமதமான விண்ணப்பங்கள் | 22 |
| 8. | | விண்ணப்பதாரர் முகவரி | 22 |
| 9. | | முக்கியத்துவம் வாய்ந்த நாட்கள் | 22 |
| 10. | | விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யும் முன் கவனிக்க வேண்டியவை | 23 |
| | 10.1 | பொதுவான குறிப்புகள் | 23 |
| | 10.2 | OMR படிவம் பூர்த்தி செய்யும் போது கவனிக்க வேண்டியவை | 24 |
| 11. | | முக்கிய அறிவுறுத்தல்கள் | 28 |
| 12. | | பாடக்குறியீடு (ANNEXURE-I) | 30 |
| 13. | | OMR மாதிரி (ANNEXURE-II) | 31 |

# 1 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் (Tamil Nadu Open University)

## 1.1. அறிமுகம்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகமானது, இந்தியாவின் 10-ஆவது திறந்தநிலைப் பல்கலைக்கழகமாக தமிழ்நாடு அரசினால் நிறுவப்பட்டுள்ளது. இந்த மாநிலப் பல்கலைக்கழகம் தமிழகச் சட்டப்பேரவை இயற்றிய (2002-ம் ஆண்டின் எண் 27) சட்டத்தின்கீழ் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, 2003-ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

உயர்கல்வியைத் தொடர இயலாத ஏழை எளியவர்கள், கிராமப்புறத்தினர், சமூகத்தில் பின்தங்கியோர், மாற்றுத்திறனாளிகள், பணிபுரிவோர், பெண்கள், சிறைப்பட்டோர், இன்னபிற காரணங்களினால் கல்வியைத் தொடர இயலாதோர், மேலும் கல்விவாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாதோர் ஆகியோருக்கு நெகிழ்வுத் தன்மையுடன் குறைந்தசெலவில் தரமான கல்வியை வழங்குவதே தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் முதன்மையான நோக்கமாகும்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் பாடப்படிப்புகள் அனைத்தும் பல்கலைக்கழக மானியக்குழு (University Grants Commission), தொலைதூரக் கல்வித் துறையகம் (Distance Education Bureau), தேசிய ஆசிரியர் கல்வி மன்றம் (National Council for Teacher Education), இந்திய மறுசீரமைப்பு மன்றம் (Rehabilitation Council of India) போன்ற அமைப்புகளால் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகம் பன்னாட்டு தொலைதூரக் கல்வியின் கூட்டமைப்பு (International Council for Distance Education), ஆசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களின் சங்கம் (Asian Association of Open Universities), இந்தியப் பல்கலைக்கழகங்களின் சங்கம் (Association of Indian Universities), இந்திய திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களின் சங்கம் (Association of Indian Open Universities), தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகம் (National Skill Development Corporation), இந்தியத் தொலைதூரக் கல்விச் சங்கம் (Indian Distance Education Association) ஆகிய அமைப்புகளில் உறுப்பினராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**பி.எட். விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்ய**
**இவ்விளக்கக் கையேட்டை**
**முழுமையாகப் படிப்பது அவசியமாகும்**

## 1.2. பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள்

**பல்கலைக்கழகத்தின் முதன்மைக் குறிக்கோள்களாவன:**

- உயர்கல்வி பெற விரும்புபவர்களுக்கு முறைசார் மற்றும் முறைசாரா கல்வியை குறைந்த செலவில் பயன்பெறும் வகையில் அளித்தல்.

- உயர்கல்வி அளித்திடும் மரபுவழி பல்கலைக்கழக முறையின் முயற்சிகளுக்கு ஈடுகொடுத்தல் மற்றும் அவற்றின் தாக்கத்தை குறைத்தல்.
- அவரவருடைய சொந்தக் காரணங்களுக்காக முறைசார் கல்வியைத் தொடர முடியாமல் விடுபட்டவர்களுக்கு மறுவாய்ப்பு அளித்தல்.
- பொதுவாக, நல்ல தரமுள்ள உயர்கல்வியை அனைவரும் சுலபமாக அடைய உதவுதல், குறிப்பாக நலிவுற்ற பிரிவினருக்கு அவர்களது வாயிற்படிக்கே சென்று கல்வியை அளித்தல்.
- அவரவர் விருப்பப்பட்ட நேரத்தில் தங்களுடைய தொழில்சார் / பணிசார் தேவைகளை நிறைவேற்றும் வகையில் தங்களுடைய அறிவையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பு அளித்தல்.
- எதைப் படிப்பது? எப்பொழுது படிப்பது? எப்படிப் படிப்பது? என்பதன் அடிப்படையிலும், கல்வித்தகுதிகள் அடிப்படையிலும், நெகிழ்வுத்தன்மை கொண்ட, நல்ல தரமான பல்கலைக்கழகக் கல்வியை பயிற்றுவிப்பதற்கு புதிய முறைகளை வடிவமைத்தல்.
- குறிப்பிட்ட வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பாடத்திட்டங்களை வடிவமைத்து வழங்குதல்.

### 1.3. பல்கலைக்கழகப் பள்ளிகள்

**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பல்துறைப் படிப்புகளுக்கான பதிமூன்று பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவையாவன:**

1) கணினி அறிவியல் பள்ளி
2) தொடர்கல்விப் பள்ளி
3) கல்வியியல் பள்ளி
4) கலையியல் பள்ளி
5) மேலாண்மையியல் பள்ளி
6) அறிவியல் பள்ளி
7) சமூக அறிவியல் பள்ளி
8) தமிழியல் மற்றும் பண்பாட்டுப் பள்ளி
9) அரசியல் மற்றும் பொது நிர்வாகவியல் பள்ளி
10) இதழியல் மற்றும் புதிய ஊடகப் படிப்புகளுக்கான பள்ளி
11) சிறப்புக் கல்வியியல் மற்றும் மறுவாழ்வுப் பள்ளி
12) குற்றவியல் மற்றும் குற்ற நீதிப் பள்ளி
13) வரலாறு மற்றும் சுற்றுலாவியல் பள்ளி

## 2 கல்வியியல் பள்ளி (School of Education)

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பழமையானதும், மிகப்பெரியதுமானது கல்வியியல் பள்ளியாகும். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில், இப்பள்ளியின் வாயிலாக இளநிலைக் கல்வியியல் பட்டப்படிப்பு 2003 ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய ஆசிரியர் கல்வி மன்றத்தின் தென்மண்டலக் குழு (SRC-NCTE), இந்த இரண்டாண்டு இளநிலைக் கல்வியியல் பட்டப்படிப்பை (பி.எட்.) தொலைநிலை வழியாக நடத்திட அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பி.எட். பட்டப்படிப்பு 2004-05 ஆம் கல்வியாண்டிலிருந்து, ஆங்கில பயிற்றுமொழி வழியாக ஒரு வருடத்திற்கு 500 பணிபுரியும் ஆசிரியர்களுக்காகவும் [NCTE Lr.No.F.TN/B.Ed./DE/166/SRO/NCTE-2004-2005/8070 dt.21.10.2004 மற்றும் 2006-07 ஆம் கல்வியாண்டிலிருந்து, தமிழ் பயிற்றுமொழி வழியாக ஒரு வருடத்திற்கு கூடுதலாக 500 பணிபுரியும் ஆசிரியர்களுக்காகவும் [F.SRO/NCTE/B.Ed.-AI/2006-2007/8152 dt.25.02.2008] அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதிலும் இருந்து இதுவரை இப்பள்ளியில், 11,000 மாணவர்கள் தங்கள் இளநிலைக் கல்வியியல் பட்டப்படிப்பை பயின்றுள்ளனர்.

2013 ஆம் ஆண்டிலிருந்து கல்வியியல் பள்ளியில் நிறைஞர் மற்றும் முனைவர் போன்ற ஆராய்ச்சிப் பட்டங்கள் முழுநேரம் மற்றும் பகுதிநேர முறையில் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளியில் தற்போது எட்டு உதவிப் பேராசிரியர்களும், ஒரு இணைப் பேராசிரியரும் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். இப்பள்ளி, மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என பலதரப்பட்டோருக்கு பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசிய மாநாடுகளையும், கருத்தரங்கங்களையும், பயிற்சிப் பட்டறைகளையும் ஆண்டுதோறும் நடத்திவருகிறது. இப்பள்ளியின் பி.எட். கற்றல் புத்தகங்கள் மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் தமிழகத்தின் பிற பல்கலைக்கழகங்களாலும், இவைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 3 இளநிலைக் கல்வியியல் (Bachelor of Education)

இளநிலைக் கல்வியியல் படிப்பு (தொலைநிலை வழியாக), முழுநேரப் பணியிலுள்ள, ஆசிரியர் பட்டயப்படிப்பு பயின்ற ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், நவீன கற்றல்-கற்பித்தல் முறைகள் மற்றும் உத்திகளை அறிந்து பயன்படுத்தும் வகையிலும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பணியிலுள்ள ஆசிரியர்கள், தற்போதைய கல்விச்சூழலில் உள்ள பல்வேறு எழுத்துமுறை மற்றும் செய்முறைகளில் பயிற்சிபெற பி.எட். பாடத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. பணியிலுள்ள ஆசிரியர்கள் தங்களது ஆசிரியப்பணிக்கு எவ்வித இடையூறும் இல்லாமல், கல்வியியலில் பல்கலைக்கழக பட்டம் பெற அனுமதிப்பது இந்த பி.எட். பட்டப்படிப்பின் முக்கிய கூறாகும்.

### 3.1. பி.எட். பட்டப்படிப்பின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டிலுள்ள, அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணியாற்றும் துவக்கக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை வளர்த்தல்.
- பல்வேறு புதியமுறைகள் மற்றும் அனுபவங்கள் வழியாக கற்பிக்கும் ஆற்றலை ஆசிரியர்களிடம் வளர்த்தல்.
- கற்பித்தலில் பல்வேறு வகுப்பறை உத்திகள், செயல்பாடுகள், அணுகுமுறைகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் ஆகியவற்றில் திறன்களை வளர்த்தல்.
- ஆசிரியர்களின் வகுப்பறை மேலாண்மைத் திறன்களை வளப்படுத்துதல்.
- கற்றல்-கற்பித்தலில் மாணவர்களுக்கு உதவும் வகையில் ஆசிரியர்களின் திறன்களை வளர்த்தல்.
- ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கினைப் புரிந்துகொள்ள உதவுவதோடு இன்றைய சமுதாயம் குறித்த முழுமையான அறிவைப்பெற வழிவகை செய்தல்.

### 3.2. பி.எட். படிப்பிற்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விளக்கக்கையேடு வெளியீடு (Release of B.Ed. Application and Prospectus)

*2016-ஆம் ஆண்டிற்கான பி.எட். விண்ணப்பப்படிவ விற்பனை, பெறப்பட்ட விண்ணப்பங்களை ஆராய்தல், முடிவுகள் வெளியீடு மற்றும் மாணவர் சேர்க்கை கலந்தாய்வு போன்றவை டிசம்பர் 2015 வரை நடைபெறும். பாடவகுப்புகள் ஜனவரி 2016-இல் தொடங்கி, டிசம்பர் 2017-இல் நிறைவு பெறுகின்றன.*

The sale of B.Ed. 2016 applications, scrutinising the applications, results publication and students' admission counselling will be done until December 2015. The programme of study starts from January 2016 and ends at December 2017.

### 3.3. படிப்புக் காலஅளவு (Duration of the Programme)

*பி.எட். பட்டப்படிப்புக்களுக்கு காலஅளவு (தொலைநிலை வழியாக) இரண்டாண்டுகள் ஆகும். எனினும், ஒரு மாணவ-ஆசிரியர் படிப்பை முடிக்க அதிகபட்சமாக நான்கு ஆண்டுகள் வரை காலஅவகாசம் எடுத்துக்கொள்ளலாம்.*

The B.Ed. Programme (Distance mode) is of 2 years. However, the student-teacher is permitted to complete within a maximum period of 4 years, after the enrolment.

### 3.4. பயிற்றுமொழி மற்றும் தேர்வுகள் (Medium of Instruction and Examinations)

*பி.எட். படிப்பு தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறது. பி.எட். படிப்புக்கு தமிழ் மற்றும் ஆங்கில பயிற்றுமொழிக்கு ஒரே விண்ணப்பம் வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு பயிற்றுமொழியைத்*

*தேர்ந்தெடுக்கவேண்டும். எனினும், மாணவ-ஆசிரியர்கள் தங்களுடைய ஒப்படைப்புகள், செய்முறைப் பதிவேடுகள் மற்றும் பாட இறுதித்தேர்வுகளை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.*

The medium of instruction is both Tamil and English. Application is common for both English and Tamil medium of B.Ed. Programme. The candidate has to select any one of the medium, either English or Tamil. However, the student-teachers are allowed to prepare their assignments, practical records and take the term-end examinations either in English or Tamil.

### *3.5. சேர்க்கை எண்ணிக்கை* (Intake)

*பி.எட். சேர்க்கைக்கான மொத்த இடங்கள் 1,000 ஆகும். தமிழ் (500 மாணவர்கள்) மற்றும் ஆங்கிலம் (500 மாணவர்கள்) பயிற்றுமொழிக்கான சேர்க்கை தனித்தனி தரவரிசை அடிப்படையில் நடைபெறும். ஒரு கல்விமையத்திற்கு 100 மாணவர்கள் ஒதுக்கீடு செய்யப்படுவர்.*

In B.Ed. the total strength of seats for admission is 1,000. These candidates will be admitted to Tamil medium (500 students) and English medium (500 students) based on the rank list separately prepared for each medium. 100 seats will be allotted to each Programme Study Centre.

### *3.6. தகுதி மற்றும் சேர்க்கை விதிமுறைகள்* (Eligibility and Admission Procedures)

#### *3.6.1. கல்வித் தகுதி* (Eligibility and Educational Qualification)

*1) அ) விண்ணப்பதாரர் ஆசிரியர் பட்டயப் பயிற்சிபெற்று, தற்போது தமிழ்நாட்டிலுள்ள ஏதேனும் ஓர் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டும்.*

Trained In-service teachers with D.T.Ed. in any Government recognised school within Tamil Nadu state.

*ஆ) தேசிய ஆசிரியர் கல்வி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வியியல் பட்டயப்படிப்பினை நேரடி முறையில் பயின்றிருக்க வேண்டும்.*

The candidates who have completed a NCTE recognised teacher education programme through face-to-face mode.

*2) அ) பி.எட். பட்டப்படிப்பில் பின்வரும் விருப்பப்பாடங்கள் வழங்கப்படுகின்றன.*

B.Ed. Degree Programme are offered under the following optional subjects.

| பாடக்குறியீடு<br>**Subject Code** | விருப்பப்பாடம்<br>**Optional Subjects** |
|---|---|
| *01* | தமிழ் / Tamil |
| *02* | ஆங்கிலம் / English |
| *03* | கணிதம் / Mathematics |
| *04* | அறிவியல் / Science |
| *05* | சமூக அறிவியல் / Social Science |
| *06* | கணினி அறிவியல் / Computer Science |
| *07* | வணிகவியல் / Commerce |
| *08* | பொருளியல் / Economics |

***பாடக்குறியீடுகள் 01-06:*** *பி.எட். படிப்பிற்கு விண்ணப்பிக்க, விண்ணப்பதாரர் விருப்பப்பாடத்தில் (01-06) இளநிலைப் பட்டபடிப்பு பெற்றிருக்க வேண்டும். மேலும், இளநிலைப் பட்டபடிப்பில் 3.6.1(9)ல் கொடுக்கப்பட்டுள்ளபடி மதிப்பெண் பெற்றவர்கள் தகுதியுடையவர்கள் ஆவர். விண்ணப்பதாரர்கள் 3.6.1(9)ல் கொடுக்கப்பட்டுள்ளபடி இளநிலைப் பட்டபடிப்பில் மதிப்பெண்கள் பெறாவிடில், அவர்கள் அதே பாடங்களில் முதுநிலைப் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பி.எட். சேர்க்கைக்குத் தகுதி கோரமுடியாது.*

**Subject Codes 01-06 :** The requisite qualifications for admission to the optional subjects (01-06) is UG Degree in the relevant subject with not less than the percentage of marks stipulated in Item 3.6.1(9). Candidates shall not claim eligibility based on the percentage of marks obtained in the PG degree, when they are not having the minimum percentage of marks in the UG degree as stipulated in Item 3.6.1(9).

*ஆ)* ***பாடக்குறியீடு 07-08*** *: இப்பாடங்களில் முதுநிலைப் பட்டப் படிப்பில் 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று, இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புக்களில் ஒரே பாடத்தைப் பயின்றவர்கள் பி.எட். சேர்க்கைக்குத் தகுதியுடையவர்கள்.*

**Subject Codes 07-08 :** The requisite qualifications for admission to these subjects in PG Degree in the relevant subject with not less than 50% marks, subject to the condition that the major subject in the UG and PG degree shall be one and the same.

*3)* *விண்ணப்பதாரர் பள்ளிக்கல்வி இயக்குநரகத்தால் உயர்நிலை/ மேல்நிலைக்கல்வி நிலையில் வழங்கப்படும் ஏதாவதொரு பள்ளிப்பாடத்தில் பல்கலைக்கழக*

மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளநிலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

The candidates should have undergone U.G. Degree examination of the UGC recognised universities in any one of the school subjects offered by the Directorate of School Education at the Secondary/Higher Secondary Education level.

4) இளநிலைப் பட்டப்படிப்பில் பகுதி-III/பகுதி-IV-ல் (இரண்டு/மூன்று முதன்மைப்பாட அமைப்பின் கீழ்) ஒன்றுக்கு மேற்பட்ட முதன்மைப்பாடத்தைப் பயின்றவர்கள் அவற்றுள் ஏதாவதொரு முதன்மைப்பாடத்தை மட்டுமே தேர்வுசெய்ய வேண்டும். மேலும் அப்பாடத்தையே விருப்பப்பாடமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதுபோன்ற சூழ்நிலைகளில் மதிப்பெண் சதவிகிதம் கணக்கிட இரண்டு/மூன்று முதன்மைப் பாடங்களில் பெற்ற மொத்த மதிப்பெண்களும் எண்ணிக்கைப்பிரிவு 3.6.1(9)-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

Candidates who have taken more than one main subject in Part-III/Part-IV (under Double/Triple Major system) of U.G. Degree course should have to choose only one of the main subjects and should have applied for that Optional only. In such cases, marks obtained by the candidates in Two/Three major subjects shall be taken into account to arrive percentage of marks as stipulated in item 3.6.1(9).

5) மூன்று ஆண்டுகளுக்கு குறைவான காலஅளவில் கூடுதல் பட்டப்படிப்பின் கீழ், பட்டம் பெற்றவர்கள் சேர்க்கைக்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

Candidates who have passed under Additional Degree Programme with less than three years duration are not eligible for admission.

6) பகுதி III-ல் இரண்டு முதன்மைப்பாடங்களைக் கொண்ட நான்கு ஆண்டு இரட்டை பட்டப்படிப்பின் கீழ் பட்டம் பெற்றவர்கள் சேர்க்கைக்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

Candidates who have passed under four year Dual Degree Programme with two major subjects under part-III are not eligible for admission.

(7) ஐந்து வருட ஒருங்கிணைந்த படிப்பின் கீழ் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எட். சேர்க்கைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதில், விண்ணப்பதாரர் முதல் மூன்று ஆண்டுகளில் (முதன்மை மற்றும் துணை/இணைப்பாடங்கள்) பெற்ற மதிப்பெண்கள் மட்டுமே பி.எட். பட்டப்படிப்பில் சேர்வதற்கு சதவிகிதமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

Candidates who have qualified in P.G. Degree (5 years Integrated Course) shall be considered for admission. In such cases, the marks obtained by the candidates in the first three years (in major and ancillary or allied subjects alone) of the course shall be taken into account for admission to the B.Ed. Degree Course.

8) அ) பின்வரும் பாடங்களில் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள் அனைவரும் பி.எட். பயில தகுதியுடையவர்கள் ஆவர்: தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, புவியியல், கணினி அறிவியல், பயன்பாட்டுக் கணிதம், பயன்பாட்டு இயற்பியல், புவியியற்பியல், உயிர்-இயற்பியல், மின்னணுவியல், தொழிற்சாலை மின்னணுவியல், உயிர்-வேதியியல், உயிர்-தொழில்நுட்பவியல், தாவர உயிரியியல், தாவர உயிர்-தொழில்நுட்பவியல், சுற்றுச்சூழல் அறிவியல், நுண் உயிரியியல், பயன்பாட்டுப் புவியியல், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் கணினி பயன்பாடு.

Candidates who have done their UG degree in Tamil, English, Mathematics, Physics, Chemistry, Botany, Zoology, History, Geography, Computer Science, Applied Mathematics, Applied Physics, Geo-Physics, Bio-Physics, Electronics, Bio-Chemistry, Bio-Technology, Plant-Biology, Plant Bio-Technology, Environmental Science, Micro-Biology, Applied Geography, Information Technology and Computer Application are eligible to apply.

ஆ) பொருளாதரம், வணிகவியல், மனையியல், அரசியல் அறிவியல், சமூகவியல், உளவியல், தத்துவவியல், தர்க்கவியல் மற்றும் இந்திய கலாச்சாரம் போன்ற பாடங்களில் 50% (இளநிலைப் பட்ட மதிப்பெண்களை கருத்தில் கொள்ளாமல்) மதிப்பெண்களுடன் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் அல்லது தொடர்புடையப் பல்கலைக்கழகத்தால் சரிநிகர் என அறிவிக்கப்பட்ட பல்துறைப் பாடங்களில் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Post Graduates in Economics, Commerce, Home Science, Political Science, Sociology, Psychology, Philosophy, Logic and Indian Culture with 50% (irrespective of their UG marks) of marks or in the interdisciplinary subjects which are being declared equivalent by the respective University can apply.

இ) ஏதேனும் ஒரு பள்ளிப் பாடத்தில் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எட். கல்வி சேர்க்கைக்குத் தகுதியானவர்கள். எனினும், மேலே குறிப்பிடப்பட்ட

பாடங்கள் அல்லாத ஒரு பாடத்தில் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள், தொடர்புடையப் பல்கலைக்கழகத்தில் உரித்தான பாடத்திற்கு சரிநிகர் சான்றிதழ் பெற்றவர்கள் பி.எட். கல்வி சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம்.

Candidates who have done their UG in the school subjects are eligible for admission to B.Ed. However, those who have done the UG in the subjects not covered under the above mentioned subjects shall have to obtain an equivalence certificate for the respective subjects from the concerned Universities to consider their admission to B.Ed. Degree course.

ஈ) பகுதி I-ல் தமிழ் அல்லது மற்ற இந்திய மொழிகள் பயிலாமல் ஆங்கிலம் மற்றும் முதன்மைப் பாடங்களுடன் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எட். சேர்க்கைக்கு தகுதியடைந்தாலும், வேலைவாய்ப்பிற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்மொழித் தேர்வில் தகுதி பெறுதல் வேண்டும்.

Candidates who have done their U.G. level without language Tamil or other Indian languages under Part-I and are awarded degree with English and Main subjects concerned need to be considered for admission to B.Ed. subject to the condition that they have to qualify in Tamil language test conducted by TNPSC for the purpose of employment.

9) பாடக்குறியீடுகள் 01 முதல் 06 (3.6.1(2)) வரையிலான பாடங்களில், இளநிலைப் பட்டப்படிப்பில் கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளபடி மதிப்பெண் பெற்றவர்கள், பி.எட். படிப்பிற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். விண்ணப்பதாரர்கள் அதே பாடத்தில் பட்ட மேற்படிப்பை முடித்திருந்தாலும், அவர்கள் இளநிலைப் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்களே, தரவரிசைப் பட்டியலில் எடுத்துக்கொள்ளப்படும். பாடக்குறியீடுகள் 07 முதல் 08 வரையிலான பாடங்களில், (பார்க்க : (3.6.1(2)) பட்ட மேற்படிப்பில் 50 சதவிகிதத்திற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புக்களில் ஒரே பாடத்தைப் பயின்றிருக்க வேண்டும்.

Candidates, with the following marks in the UG Degree are eligible for admission to B.Ed. degree programme with the subjects in subject codes 01 to 06 (Refer Item 3.6.1(2)). The marks obtained in UG degree alone shall be taken to arrive the eligibility even if they possess PG Degree in the same subject. For the subjects in subject code 07 & 08 (Refer Item 3.6.1 (2)), PG Degree with not less than 50% marks is mandatory and the subject in UG and PG shall be one and the same.

| Community / Category<br>சாதி/பிரிவு | Minimum Marks Required<br>தேவையான குறைந்த பட்ச மதிப்பெண்கள் |
|---|---|
| OC<br>இதர வகுப்பினர் | 50% |
| BC(O) / BC(M)<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஏனையோர்),<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | 45% |
| MBC / DNC<br>மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /<br>சீர்மரபினர் | 43% |
| SC(O) / SC(A) / ST<br>தாழ்த்தப்பட்ட பிரிவினர் (ஏனையோர்), /<br>தாழ்த்தப்பட்ட பிரிவினர் (அருந்ததியர்) /<br>பழங்குடி இனத்தவர் | 40% |

**Note:**

அ) *இளநிலை பட்டப் படிப்பில் [தமிழ்/ஆங்கிலம்/அறிவியல்/கணிதம்/சமூக அறிவியல் / கணினி அறிவியல்], பகுதி III மற்றும் IVல், முதன்மை, துணை மற்றும் செய்முறைப் பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் மட்டுமே தரவரிசைப் பட்டியல் தயாரிக்க எடுத்துக்கொள்ளப்படும். பகுதி V-ல் பெற்ற மதிப்பெண்கள் மதிப்பெண் சதவிகிதம் கணக்கிட எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட (அல்லது அவற்றிற்கு இணையான) பாடங்களில் முதுநிலைப் பட்டம் பெற்றிருப்பின், பிரிவு 3.6.3 (2அ) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, முன்னுரிமை மதிப்பெண்கள் வழங்கப்படும்.*

*Marks obtained by the candidates in the UG Degree Course Part-III / IV Major Allied including Practical [Tamil / English / Science / Mathematics / Social Science / Computer Science] alone shall be taken into account to arrive at the percentage of marks mentioned above. Marks obtained under Part-V subjects shall not be taken into account to arrive at the percentage of marks. If the candidates possess PG degree in these subjects, weightage of marks will be given as mentioned herein under item 3.6.3 (2a) only for arriving rank.*

ஆ) *வணிகம் மற்றும் பொருளாதாரம் ஆகிய பாடங்களில் பட்ட மேற்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் தரவரிசைப் பட்டியல் தயாரிக்க அடிப்படை மதிப்பெண்ணாக எடுத்துக்கொள்ளப்படும். எனினும், பிரிவு 3.6.3 (2அ)ல், குறிப்பிட்டுள்ளபடி முன்னுரிமை மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது.*

*Marks obtained by the candidates in the PG Degree [Commerce / Economics] shall be considered eligible for admission, but weightage marks will not be given as mentioned herein under item 3.6.3 (2a)*

*இ) செய்முறைத் தேர்வு உள்ளிட்ட முதன்மை/துணை/இணை/கூடுதல் பாடங்களில் (பகுதி-III மற்றும்பகுதி-IV) விண்ணப்பதாரர் பெற்ற மதிப்பெண்கள் மட்டுமே மதிப்பெண் சதவிகிதம் கணக்கிட எடுத்துக்கொள்ளப்படும்.*

*To arrive at above percentage of marks, the marks obtained by the candidates in Major/Ancillary/Allied/Extra Disciplinary subjects (Part-III & IV) including practicals alone shall be taken into account.*

*ஈ) தசம எண்களுடன் கூடிய மதிப்பெண் சதவிகிதத்தை, அடுத்த பெரிய முழுமை எண்ணாக மாற்ற அனுமதியில்லை.*

*Rounding of marks to the next higher integer shall not be permitted.*

*10) 10+2+3 அல்லது 11+1+3 கல்வி முறையின் கீழ் பயிலாமல் பொருளாதாரம், வணிகவியல், மனையியல், அரசியல் அறிவியல், சமூகவியல், உளவியல், தத்துவவியல், தர்க்கவியல் மற்றும் இந்திய கலாச்சாரம் போன்ற பாடங்களில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எட். கல்வி சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.*

Candidates who have passed PG degree in Economics, Commerce, Home Science, Political Science, Sociology, Psychology, Philosophy, Logic and Indian Culture without undergoing 10+2+3 or 11+1+3 pattern of education shall not be considered for admission.

*11) உடல் ஊனமுற்றோர்கள் மற்றும் கண்பார்வைக் குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் பட்டப் படிப்பில் தேர்ச்சி அடைந்திருந்தாலே போதுமானது.*

In case of physically and visually challenged candidates, a minimum pass in the degree is enough.

*எவ்வகையிலேனும், பி.எட். கல்விச் சேர்க்கை, பல்கலைக்கழகம்/தமிழக அரசு அந்தந்த காலகட்டத்தில் வரையறுத்த விதிமுறைகள்/வழிகாட்டுதல்கள் அடிப்படையிலேயே நடைபெறும்.*

However, the basis of selection shall be in accordance with the Regulations of the University/ Government of Tamil Nadu Guidelines for admission to B.Ed. course in force from time to time.

### *3.6.2* இடஒதுக்கீடு (Reservation of Seats)

*பழங்குடி இனத்தவர், தாழ்த்தப்பட்ட பிரிவினர் (ஏனையோர்), தாழ்த்தப்பட்ட பிரிவினர் (அருந்ததியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் (ஏனையோர்), பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) மற்றும் இதர வகுப்பினர் ஆகியோருக்கான இடஒதுக்கீட்டிற்கு தமிழ்நாடு அரசின் விதிமுறைகள் பின்பற்றப்படும். அதன் விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:*

Reservation of Seats for candidates belonging to ST, SC(Others), SC (Arunthathiyar), MBC/DNC, BC(Others), BC (Muslim) and OC will be made as per the rules and regulations of Government of Tamil Nadu as tabled below:

| **வகுப்புகள் (Community)** | **இடஒதுக்கீடு (Reservation of Seats)** |
|---|---|
| *இதர வகுப்பினர் /* OC | *31%<br>(தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் 1%, உடல் ஊனமுற்றோர் 3% உள்ளடங்குவார்கள்.)* |
| *பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஏனையோர்)* BC-Others | *26.5%* |
| *பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்)* BC-Muslim | *3.5%* |
| *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர்* MBC/DNC | *20%* |
| *தாழ்த்தப்பட்ட பிரிவினர் (ஏனையோர்)* SC-Others | *15%* |
| *தாழ்த்தப்பட்ட பிரிவினர் (அருந்ததியர்)* SC-Arunthathiyar | *3%* |
| *பழங்குடி இனத்தவர் /* Scheduled Tribes | *1%* |

### *3.6.3* தரவரிசைப் பட்டியல் (Rank Listing)

*1. அ. இளநிலைப் பட்டத்தில் மூன்று ஆண்டுகளிலுமுள்ள முதன்மை மற்றும் துணைப் பாடங்களில் (எழுத்து மற்றும் செய்முறை) விண்ணப்பதாரர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் / மதிப்பெண்களாக மாற்றப்பட்ட தரப்புள்ளிகள், தரவரிசைப் பட்டியல் தயாரிப்பதற்கான அடிப்படை மதிப்பெண்ணாக எடுத்துக்கொள்ளப்படும்.*

The Marks/grades (converted to marks) obtained by the candidate in major and allied subjects (both in Theory and Practical) in all three years in the UG degree will be taken as the base mark for ranking.

ஆ. இளநிலைப் பட்டப்படிப்பில் பகுதி-III-ல் (இரண்டு/மூன்று முதன்மைப்பாட அமைப்பின் கீழ்) ஒன்றுக்கு மேற்பட்ட முதன்மைப் பாடத்தைப் பயின்றவர்கள் அவற்றுள் ஏதாவதொரு முதன்மைப் பாடத்தை மட்டுமே தேர்வுசெய்ய வேண்டும். மேலும், அப்பாடத்தையே விருப்பப்பாடமாக தேர்ந்தெடுக்கவேண்டும். இது போன்ற சூழ்நிலைகளில் மதிப்பெண் சதவிகிதம் கணக்கிட இரண்டு/ மூன்று முதன்மைப்பாடங்களில் பெற்ற மொத்த மதிப்பெண்களும் எண்ணிக்கைப் பிரிவு 3.6.1(9)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

Candidates who have taken more than one main subject in Part-III (under Double/Triple Major System of U.G. Degree course should have to choose only one of the main subjects and should have applied for that optional only. In such cases, marks obtained by the candidates in Two/Three major subjects shall be taken into account to arrive percentage of marks as stipulated in item 3.6.1(9).

இ. 10+2+5 அல்லது 11+1+5 கல்விமுறையின் கீழ் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் (5 வருட ஒருங்கிணைந்த படிப்பு) பி.எட். கல்வி சேர்க்கைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதில், விண்ணப்பதாரர் முதல் மூன்று ஆண்டுகளில் (முதன்மை மற்றும் துணைப்பாடங்கள்) பெற்ற மதிப்பெண்கள் மட்டுமே பி.எட். கல்வி பட்டப்படிப்பில் சேர்வதற்கு சதவிகிதமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

Candidates who have qualified in P.G. Degree (5 year Integrated Course) under 10+2+5 or 11+1+5 pattern of study shall be considered for admission. In such cases, the marks obtained by the candidates in the first three years (in major and ancillary or allied subjects alone) of the course alone shall be taken into account for admission to the B.Ed. Degree Course.

2. அ. விண்ணப்பதாரரின் அதிகபட்ச கல்வித்தகுதிக்கான முன்னுரிமை மதிப்பெண்கள் பின்வரும் முறையில், அடிப்படை மதிப்பெண்களோடு சேர்க்கப்பட்டு தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். எனினும், எண்ணிக்கைப் பிரிவு 3.6.1(9)ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச மதிப்பெண்கள் அவசியமாகும்.

Weightage for the highest qualification of the candidate will be given as follows and added to the base mark for the ranking. However, minimum mark mentioned in item 3.6.1(9) is mandatory.

| அதிகபட்ச கல்வித்தகுதி<br>**Highest Qualification** | முன்னுரிமை மதிப்பெண்கள்<br>**Weightage Marks** |
|---|---|
| முதுநிலைப்பட்டம்<br>Candidates with PG | 4 |
| நிறைஞர் பட்டம்<br>Candidates with M.Phil. | 1 |
| முனைவர் பட்டம்<br>Candidates with Ph.D. | 1 |
| ஆசிரியர் பணி அனுபவம்<br>Teching experience | அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்<br>(ஒரு வருடத்திற்கு 1மதிப்பெண்)<br>maximum 10 marks (1 mark per year) |

ஆ. இளநிலைப் பட்டத்தில் பகுதி-IIIல் பயின்ற முதன்மைப் பாடத்திலேயே பெற்ற அதிகபட்ச கல்வித்தகுதிக்கு மட்டுமே முன்னுரிமை மதிப்பெண் வழங்கப்படும். மேலும், அதே பாடத்தை மட்டுமே பி.எட். கல்வியில் விருப்பப்பாடமாக பயில முடியும்.

The higher qualification for which weightage is given should be in the same subject studied as the main subject in part-III of the UG degree and preferred as optional subject in B.Ed. course.

இ. கீழ்க்காணும் ஏதேனும் ஒரு கல்லூரி அளவிலான கல்விசார் நடவடிக்கைகளுக்கு கூடுதலாக 3 (மூன்று) மதிப்பெண்கள் வழங்கப்படும்.

i) நாட்டு நலப்பணித் திட்டம் (சிறப்பு முகாமில் குறைந்தபட்சம் ஏழு நாட்கள் பங்களித்து; இரண்டு ஆண்டுகளுக்கு பதிவு செய்திருக்கவேண்டும்).

ii) தேசிய மாணவர் படை (பி அல்லது சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்)

iii) விளையாட்டு (மாநில/தேசிய அளவில் கல்லூரி பிரதிநிதித்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.)

Weightage of 3 (three) marks for participation in any one of the following co-curricular activities at college level will be added.

i) National Service Scheme (NSS) (with two years enrolment in NSS and with minimum of seven days participation in the Special camp alone will be considered).

ii) National Cadet Corps (NCC) (should have B or C certificate)

iii) Sports (should have represented the college at State/National level)

3. *ஒரே மதிப்பெண் கொண்டோர் போட்டியை தளைத்தகர்வு செய்தல்* (To break the same score (a tie) in the rank list)

*ஒரே மதிப்பெண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கிடையே நிலவும் போட்டியை தளைத்தகர்வு செய்ய கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:*

When two or more candidates secure the same score (a tie) in the rank list, the following criteria may be considered for final selection to break the tie in the following order:

*அ. பிறந்த நாள் - வயது மூப்பு அடிப்படையில் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.*

Based on date of birth - seniority one mark will be given.

*ஆ. மேலும், போட்டி நீடித்தால், விண்ணப்பதாரர் பெயரின் ஆங்கில எழுத்து அகரவரிசையில் மாணவர்களின் சேர்க்கை தரவரிசை செய்யப்படும்.*

If the tie still persists, the selection will be made by considering the alphabetical order of the names of the candidates in English.

### 3.7. கல்விக்கட்டணம் (Programme Fee)

#### 3.7.1. பி.எட். கல்விக்கட்டணம்

*கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது போன்று கல்விக்கட்டணம் ரூ.32,000-ஐ முழுப்படிப்பு காலஅளவிற்கும் சேர்த்து சேர்க்கையின் போதே செலுத்தவேண்டும்.*

Programme fee of Rs. 32,000/- (Rupees Thirty Two Thousand only) should be paid for the entire programme of study at the time of admission as prescribed in the following table:

| ஆண்டு Year | பதிவுக் கட்டணம் Registration Fee | தபால் கட்டணம் Postal Fee | கல்விக் கட்டணம் Tuition Fee | பாடப்புத்தகங்கள் கட்டணம் Book Fee | செய்முறைக் கட்டணம் Practical Fee | செய்முறைத் தேர்வு Practical Exam | மொத்தம் Total |
|---|---|---|---|---|---|---|---|
| I year | 500/- | 200/- | 5,300/- | 5,000/- | 5,000/- | - | 16,000 |
| II year | - | 200/- | 5,300/- | 5,000/- | 5,000/- | 500/- | 16,000 |
| | | | | | | மொத்தம் (Total) | 32,000 |

**3.7.2 பி.எட். மாற்றுத்திறனாளிகளுக்கான கல்விக்கட்டணம் (Fee Payment for Differently-Abled Students)**

பி.எட். சேர்க்கை கலந்தாய்விற்கு வரும் மாற்றுத்திறனாளி மாணவர்களும் மொத்தக் கட்டணத்தையும் சேர்க்கையின்போது செலுத்தவேண்டும். பின்னர் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து கல்விக்கட்டணத்தைத் திரும்ப பெற்றுக்கொள்ளலாம்.

The differently-abled students shall also pay the full fees at the time of admission. The Tuition fee will be refunded after the admission on production of relevant documents.

**3.7.3. வங்கி வரைவோலை குறித்த விவரங்கள் (Details of the Demand Draft)**

வங்கி வரைவோலையின் பின்பக்கத்தில் பின்வரும் விவரங்களை பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

Please write on the back side of the demand draft in CAPITAL letters the following details:

| | |
|---|---|
| மாணவ-ஆசிரியரின் பெயர்<br>Name of the Student-teacher | |
| படிப்பு<br>Programme | B.Ed. |
| பதிவு எண் Enrollment Number | |
| வங்கியின் பெயர் மற்றும் நாள்<br>Name of the Bank & Date | |
| தொகை ரூபாயில்<br>Amount in Rs | Rs.32,000/- |

**3.7.4. கட்டணத் தொகையைத் திருப்பியளித்தல் மற்றும் திருத்தியமைத்தல்** (Fee Refund and Revision)

விண்ணப்பதாரர் பி.எட். கல்வி சேர்க்கை பெற்றபிறகு, செலுத்தப்பட்ட கட்டணத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது. தேவை ஏற்படின், கல்விக்கட்டணத்தை திருத்தியமைக்க பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரமுண்டு.

After the admission of candidate into B.Ed., fee paid is not refundable for any reason. The University reserves the right to revise the fee structure if required.

## 4 கல்வி மைய ஒதுக்கீடு (Allotment of Study Centres)

### 4.1. பி.எட். மாணவர்களுக்கு கல்வி மையங்கள் ஒதுக்கீடு (Allotment of Programme Study Centres to B.Ed. Students)

- தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் கல்வி மைய ஒதுக்கீடு, பல்கலைக்கழக விதிகளின்படி வழங்கப்படும். கல்வி மைய ஒதுக்கீடு வழங்கப்பட்ட பின், எக்காரணம் கொண்டும் வேறு கல்வி மையத்திற்கு மாற்றம் பெற இயலாது.

  Programme Study Centre for each selected candidate will be allotted as per the regulations of Tamil Nadu Open University. After the allotment of Programme Study Centre, the candidate cannot get the change of Programme Study Centre.

- மொத்தமுள்ள 1000 மாணவர்களும், NCTE அனுமதி பெற்ற கல்வி மையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவார்கள். ஒவ்வொரு கல்வி மையத்திற்கும் 50 தமிழ் பயிற்றுமொழி, 50 ஆங்கில பயிற்றுமொழி மாணவர்கள் எனப் பகிர்ந்தளிக்கப்படுவார்கள்.

  The total of 1000 students will be distributed to the NCTE recognised Programme Study Centres for undergoing the programme. Each Programme Study Centre will be allotted 50 Tamil Medium Students and 50 English Medium Students.

- மாணவர்களின் கல்வி மைய ஒதுக்கீடு, அவர்கள் இளநிலைப் பட்டத்தில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் (தரவரிசைப்படி), பிற முன்னுரிமைக் கூறுகளின் அடிப்படையிலும், தமிழக அரசின் இடஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்றியும் சேர்க்கை கலந்தாய்வின்போது வழங்கப்படும். (பார்க்க எண்ணிக்கைப் பிரிவு-3.6) எனினும், மாணவர் விரும்பிய கல்வி மையம் கிடைக்காதபட்சத்தில் பல்கலைக்கழகத்தின் முடிவே இறுதியானது.

  The allotment of the Programme Study Centre for the candidates is based on the marks obtained in the UG degree (rank list), other preference criteria and also following the community reservation policy of Government of Tamil Nadu during admission counselling (Refer item-3.6). However, if vacancy is not available as per the candidate's choice, the decision of the University will be final in this regard.

### 4.2. கல்வி மையங்கள் (Programme Study Centre)

பல்கலைக்கழகம், NCTE அங்கீகாரம் பெற்ற 10 கல்வி மையங்களை தமிழகத்தில் கீழ்க்கண்ட நகரங்களில் கொண்டுள்ளது. அவைகளைப் பற்றிய விவரங்கள் கீழே

பட்டியலிடப்பட்டுள்ளன. இக்கல்வி மையங்களை, எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றியமைக்க பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

1. சென்னை
2. திருநெல்வேலி
3. திருவண்ணாமலை
4. நாமக்கல்
5. தாராபுரம்
6. தஞ்சாவூர்
7. மதுரை
8. கடலூர்

The University has NCTE recognised 10 Programme Study Centres in the following cities in Tamil Nadu. The details are listed below. The University has the rights to change these Programme Study Centres at any time.

1. Chennai
2. Tirunelveli
3. Thiruvannamalai
4. Namakkal
5. Dharapuram
6. Thanjavur
7. Madurai
8. Cuddalore

### 4.3. கல்வி மையங்களில் வகுப்புகள் (Classes in Study Centres)

ஒவ்வொரு மாணவரும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட கல்வி மையங்களில் மட்டுமே பயிற்சி பெறுதல் வேண்டும். கல்வி மையங்கள் நடத்தக்கூடிய வகுப்புகள் அனைத்திலும் கலந்துகொள்வது அவசியமாகும். இல்லையெனில், கற்போர் பருவ இறுதித்தேர்வில் பங்கேற்க இயலாது.

Each student should undergo the training in the allotted Programme Study Centre only. Learners should attend all classes compulsorily conducted by the Study Centres, without which they cannot appear for the Term-End Examination (TEE)

## 5 மாணவர் சேர்க்கைக்கான அழைப்புக் கடிதம் (Admission Call Letter)

பல்கலைக்கழகத்தால் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பி.எட். கல்வி பயில தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் 1000 மாணவர்களுக்கு, அவர்களின் முகவரிக்கு அழைப்புக்கடிதம் அனுப்பப்படும். மாணவர் சேர்க்கையும், கல்வி மையத் தேர்வும் இளநிலைப் பட்டத்தில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் (தரவரிசைப்படி), பிற முன்னுரிமைக் கூறுகளின் அடிப்படையிலும், தமிழக அரசின் இடஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்றியும் மட்டுமே நடைபெறும். பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ள சேர்க்கைக் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறும் நாள் பல்கலைக்கழகத்தால் பதிவுத்தபால் மூலம் தெரிவிக்கப்படும். கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத மாணவர்கள் தங்களது சேர்க்கைக்கு உரிமைகோரும் தகுதி இழப்பர்.

The University will send CALL LETTERS to all provisionally selected 1000 candidates for B.Ed. Tamil and English Medium. Selection for admission into B.Ed. and allotment of

Study Centres will be made only based on the marks obtained in the UG degree (rank list), other preference criteria and also following the community reservation policy of Government of Tamil Nadu. Admission Counselling will be conducted at Tamil Nadu Open University Campus on the dates which will be intimated individually. Those who do not report themselves on the day of the Admission Counselling Session will forfeit their claim for a seat.

### 5.1. மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு (Students Admission Counselling)

*சேர்க்கை, கலந்தாய்விற்கு வருகைதரும் மாணவர்கள், கீழ்க்காணும் தங்களுடைய உண்மையான கல்விச்சான்றிதழ் மற்றும் அதன் நகல்களைக் கொண்டுவர வேண்டும்.*

The candidates who are called for Admission Counselling should bring the following original certificates and Photostat copies:

**அ) சான்றிதழ்களின் வரிசைப்பட்டியல் (List of Certificates)**

1. *சேர்க்கைக்கான கலந்தாய்வு அழைப்புக்கடிதம்*

   Admission Counselling Call Letter

2. *பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள்* (Filled-in Forms) *(சேர்க்கை கலந்தாய்வு அழைப்புக்கடிதம் பெற்றபின், படிவங்களை* www.tnou.ac.in *இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்).*

   After getting the admission counselling call letters, the candidates should download the forms from the TNOU website www.tnou.ac.in

3. *சாதிச்சான்றிதழ்* (Community Certificate)

   *விண்ணப்பதாரர்கள், கீழ்க்கண்ட வகுப்பினராக இருந்தால், நிரந்தர சாதிச் சான்றிதழ் கீழ்க்கண்ட அதிகாரிகளிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.*

   The candidates should possess permanent community certificate obtained from the under mentioned authorities if the candidates belong to the following categories.

| | |
|---|---|
| SC(O), SC(A) | *தாசில்தார் - சொந்தவட்டம்* |
| ST | *வருவாய்ப் பிரிவு அலுவலர் (11.11.1989 க்கு பின்னர்)* |
| BC(O), BC(M) & MBC / DNC | *தலைமை நிலைய துணை தாசில்தார் / சிறப்பு துணை தாசில்தார்* |

**குறிப்பு:** *விண்ணப்பதாரர் சேர்க்கைக் கலந்தாய்வின் போது, உரிய அதிகாரியிடமிருந்து SC, SC(A), ST, BC(O), BC(M) & MBC/DNC சாதிச்சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கத் தவறினால், அவரது பி.எட். சேர்க்கை நீக்கம் செய்யப்படும். (G.O.Ms.781, வருவாய்த்துறை, 02.05.1988).*

**Note:** *If a candidate who claims to belong to SC(O), SC(A), ST, BC(O), BC(M), MBC/ DNC fails to produce the Community Certificate in original from the competent authority (in accordance with G.O. Ms.781, Revenue Department, dated May 2, 1988) at the time of admission counselling, the selection of such candidate will be cancelled.*

4. உடல் ஊனமுற்றோர்: உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோர், மருத்துவச் சான்றிதழ் கட்டாயம் பெற்று வரவேண்டும் (மருத்துவச் சான்றிதழ் வழங்கும் அதிகாரி - துணை பொதுத்துறை மருத்துவர் தகுதிக்குக் குறையாதவர்; ஊனத்தின் குறைபாடு - 40 சதவிகிதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்).

   Medical Certificate is to be produced by Physically Handicapped and Blind candidates (Certificate issuing authority-not less than Assistant Civil Surgeon Category; Percentage of disability - not less than 40%).

5. முன்னாள் இராணுவத்தினருக்கான சான்றிதழ் (புகைப்பட சான்றுடன்).

   Ex-Servicemen Certificate (with Photograph proof).

6. 10, +2 மதிப்பெண் பட்டியல் மற்றும் ஆசிரியர் பட்டயப் படிப்புச் சான்றிதழ்

   10th Std., 12th Std. Statement of Marks and D.T.Ed. certificate.

7. இளநிலை பட்டச்சான்றிதழ் / பட்ட தற்காலிக தேர்ச்சிச் சான்றிதழ் / UG Degree/ Provisional Certificate

8. இளநிலை பட்ட மதிப்பெண் பட்டியல் / UG Statement of Marks

9. முதுநிலை பட்டச்சான்றிதழ் / பட்ட தற்காலிக தேர்ச்சிச் சான்றிதழ் / PG Degree Provisional Certificate

10. முதுநிலை பட்ட மதிப்பெண் பட்டியல் / PG Statement of Marks

11. நிறைஞர் பட்டச்சான்றிதழ் / M.Phil. Degree Certificate

12. முனைவர் பட்டச்சான்றிதழ் / Ph.D. Degree Certificate

**குறிப்பு-1:** *வரிசை எண் 3 முதல் 12-வரை கொடுக்கப்பட்டுள்ள உண்மைச் சான்றிதழ்கள் அனைத்தும் பல்கலைக்கழக அலுவலரால் சரிபார்க்கப்படும். ஆகவே, விண்ணப்பதாரர், சேர்க்கை கலந்தாய்வின் போது அவற்றை வரிசைப்படுத்தி தனியாக வைத்தல் வேண்டும்.*

**Note-1:** *The original certificate for serial numbers 3-12 will be scrutinised by the University officials. Hence, the candidates should keep the originals in order separately, during Admission Counselling.*

**குறிப்பு-2:** *கல்விக் கட்டணத்திற்கான வரைவுக் காசோலை மற்றும் 4 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் தனியாக சமர்ப்பித்தல் வேண்டும்.*

**Note-2:** *The demand draft for programme fee and 4 passport size photographs should be submitted separately.*

13. அ) நாட்டு நலப்பணித் திட்ட சான்றிதழ் / NSS Certificate

    ஆ) தேசிய மாணவர் படை சான்றிதழ் / NCC Certificate

    இ) விளையாட்டுச் சான்றிதழ் / Sports Certificate

## 6 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (Address to Send Filled-in Application)

பூர்த்தி செய்யப்பட்ட பி.எட். விண்ணப்பத்துடன் (OMR), ஆசிரியர்ப் பட்டயச்சான்றிதழ், பட்டத் தொகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் தற்காலிக பட்டம் / பட்டச் சான்றிதழ் (நகல்) மற்றும் ரூ.6/- அஞ்சல் தலை ஒட்டிய ஒப்புதல் அட்டை போன்றவற்றை பல்கலைக்கழகம் அச்சிட்டு கொடுத்துள்ள (பெரிய பழுப்புநிற) உரையிலிட்டு பல்கலைக்கழக அலுவலகத்தை 30.11.2015 நாளுக்குள் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பவேண்டும்.

The filled-in application form (OMR sheet), D.T.Ed. Certificate, degree consolidated mark sheet with provisional certificate / degree certificate (Photostat copy) along with duly filled-in acknowledgement card affixed with postage of Rs.6/- are to be kept in the TNOU's printed cover (A4 size brown) and this should be mailed to the following address so as to be received at the University Office on or before 30.11.2015 .

விண்ணப்ப OMR-ஐ தாள்செருகுகுழை / குண்டூசி இணைப்பு இல்லாமல், பின்வரும் முகவரிக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும்:

The candidate should not staple / pin the application OMR sheet and send it to the following address only:

| | |
|---|---|
| **உறுப்பினர் செயலாளர்,<br>பி.எட். சேர்க்கை,<br>தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,<br>எண். 577, அண்ணா சாலை,<br>சைதாப்பேட்டை, சென்னை - 600 015.** | **The Member Secretary,<br>B.Ed. Admission,<br>Tamil Nadu Open University,<br>No. 577, Anna Salai,<br>Saidapet, Chennai - 600 015.** |

## 7 முழுமையாக நிரப்பப்படாத மற்றும் காலதாமதமான விண்ணப்பங்கள் (Incomplete and Late Applications)

முமையாக நிரப்பப்படாத, குறிப்பிட்ட நாளுக்குப்பிறகு கிடைக்கப்பெறும், மற்றும் தவறான தகவல்கள் கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புமின்றி உறுதியாக நிராகரிக்கப்படும். ஆகவே, விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தை கவனமாகப் பூர்த்தி செய்து, மேற்கண்ட முகவரிக்கு *30.11.2015*-க்குள் பல்கலைக்கழக அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். இது குறித்த எவ்வித கடிதத்தொடர்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

Incomplete, late application forms and also application forms furnishing false information will be summarily rejected without any intimation to the candidate concerned. Candidates are, therefore, advised to fill up the relevant columns carefully and submit the application form to the above mentioned address on or before 30.11.2015. In this connection no correspondence will be entertained.

## 8 விண்ணப்பதாரர் முகவரி (Applicant Address)

விண்ணப்பத்தில் தங்களது முகவரியை தெளிவாகவும், அஞ்சல் குறியீட்டு எண்ணுடனும் எழுதவேண்டும். பி.எட். சேர்க்கை நிறைவடையும்வரை தங்களால் கொடுக்கப்பட்ட முகவரிக்கு மட்டுமே அனைத்து தகவல்களும் தெரிவிக்கப்படும். முகவரி மாற்றம் செய்ய அனுமதியில்லை.

Your address in the OMR application form must be complete with Pin code in all respects as the University will correspond with you in the address given by you in the application (OMR) until the B.Ed. admission process is over. The change of address is not allowed.

## 9 முக்கியத்துவம் வாய்ந்த நாட்கள் (தற்காலிகம்) (Important Dates - Tentative)

| | |
|---|---|
| விண்ணப்பப்படிவம் வழங்குவதற்கான தொடக்க நாள்<br>Starting date for the issue of Application and Prospectus | *14.10.2015* |
| விண்ணப்பப்படிவம் வழங்குவதற்கான கடைசி நாள்<br>Last date for issue of Application and Prospectus | *30.11.2015*<br>(5.00 p.m.) |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்<br>Last date for the submission of filled-in Application forms to TNOU's office | *30.11.2015*<br>(5.30 p.m.) |
| சேர்க்கை முடிவு அறிவிப்பு நாள்<br>Announcement of Admission Results | *11.12.2015* |
| பி.எட். சேர்க்கைக்கான கலந்தாய்வு துவக்க நாள்<br>Starting date of B.Ed. Admission Counselling | January-*2016* |

## 10 விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யும் முன் கவனிக்க வேண்டியவை (Instructions before filling the Application)

### *10.1. பொதுவான குறிப்புகள்*

OMR படிவத்தை பூர்த்தி செய்யும் முன் கீழ்க்கண்ட குறிப்புகளை கவனமாகப் படித்து அதன்படி பூர்த்தி செய்யவும். மாதிரி OMR படிவம் இணைப்பு-II ல் இணைக்கப்பட்டுள்ளது.

Read the following instructions carefully before filling the OMR Coding Sheet given along with the Prospectus. Model OMR form is enclosed in Annexure-II.

1. விளக்கக்கையேட்டிலுள்ள எண்ணும் OMR படிவத்திலுள்ள எண்ணும் ஒன்றாக உள்ளதா என உறுதி செய்க.

   Ensure that the Prospectus Number and the OMR Coding Sheet Number given are the same.

2. விண்ணப்பதாரர்கள் ஜனவரி 2016-ஆம் ஆண்டிற்கான விளக்கக்கையேட்டுடன் இணைக்கப்பட்டுள்ள OMR படிவத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

   Candidates must use the Application for January-2016 OMR Coding Sheet attached with the Prospectus only.

3. விண்ணப்பப்படிவத்தை நகல் எடுத்து பயன்படுத்தக்கூடாது.

   Photocopy/reproduction/unauthorised printed copy of the application form will not be entertained.

4. விண்ணப்பப்படிவத்திலுள்ள விவரங்கள் மாற்றத்தக்கதல்ல.

   The details given in the application cannot be changed.

5. ஒப்புதல் அட்டையில் தெளிவான அஞ்சல் குறியீட்டுஎண்ணுடன் கூடிய முழுமுகவரியை எழுதி ரூ.6/- அஞ்சல்தலை ஒட்டி விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும். விண்ணப்பம், அஞ்சல் மூலம் கிடைக்கப்பெறுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ பல்கலைக்கழகம் பொறுப்பேற்காது.

   Candidates should clearly write their Postal Address on the Acknowledgement Card attached with the Application and affix Rs.6/- postage stamp. The University will not be responsible for any delay or loss of application form sent by post.

6. உண்மைச் சான்றிதழ்களை சரிபார்க்கும்போது, விண்ணப்பதாரர் கொடுத்த தகவல்கள் உண்மைக்கு மாறாக இருப்பது கண்டறியப்பட்டால், அவர் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தாலும் அவரது சேர்க்கை உடனடியாக நீக்கம் செய்யப்படும். அவர் எந்தச் சூழ்நிலையிலும் சேர்க்கைக்கான உரிமையைக் கோரமுடியாது.

During the verification of the original certificates, if the information furnished is found to be incorrect, the admission will be cancelled, even if the candidate is found eligible for provisional selection. The candidate shall have no claim, whatsoever, on the admission in such circumstances.

7. OMR படிவத்திலுள்ள 19 எண்ணிக்கைப் பிரிவுகளை விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டும்.

   There are nineteen items in the OMR Coding Sheet to be filled by the candidate.

8. OMR படிவத்தை எண்ணிக்கைப் பிரிவு 1லிருந்து கவனமாகப் பூர்த்தி செய்யவும்.

   Fill the OMR Coding Sheet from item No.1 onwards.

9. OMR படிவத்தைத் தெளிவாக, பெரிய ஆங்கில எழுத்துக்களில், உங்கள் கையெழுத்தில் நிரப்ப வேண்டும். கருப்புநிற பந்துமுனைப் பேனாவால் பெரிய எழுத்தில் திருத்தமில்லாமல் பூர்த்தி செய்யவும்.

   Fill the OMR Coding Sheet in your own handwriting, clearly and legibly and in CAPITAL letters. Use black ball-point pen only for writing and shading. Do not overwrite.

10. OMR படிவம், OMR ஊடுருவியின் மூலம் சரிபார்க்கப்படுகிறது. அடைப்புகளை நீள்வட்ட வடிவில் நிழலிடவும் [⬬]. அடைப்பினுள் செவ்வகம் [ ■ ], சரியென இடும் குறி [✓], பெருக்கல் குறி [X], புள்ளி [•] போன்றவற்றை இடக்கூடாது.

    This form is to be processed on OMR Scanner. Shade the brackets as filled up here [⬬]. The shading should not go beyond the bracket. Do not shade [■] or tick [✓] or cross [X] or place a dot [•] within the bracket.

11. OMR படிவத்தைக் கவனமாக அனுப்பவும்.

    OMR sheet should be sent with due care.

12. OMR படிவத்தை தாள்செருகுகுழை கொண்டு இணைத்தோ, சுருட்டியோ, விளிம்புகளை மடக்கியோ, கிழித்தோ, உருமாற்றியோ அனுப்பக்கூடாது. இவை உங்களது விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்ய வழிவகுக்கும்.

    Do not staple, crumple, damage the edges, tear, spoil or otherwise disfigure the OMR sheet. This may lead to the rejection of your application.

### 10.2. OMR படிவம் பூர்த்தி செய்யும் போது கவனிக்க வேண்டியவை

எண்ணிக்கைப் பிரிவு 1 முதல் 19 வரை பூர்த்தி செய்ய கவனிக்க வேண்டியவை
Instructions to fill the items 1 to 19 carefully

1. **விண்ணப்பதாரரின் பெயர் :** தங்களது பெயரை எஸ்.எஸ்.எல்.சி. / மெட்ரிக் சான்றிதழின் முதல் பக்கத்திலுள்ளபடி, பெரிய எழுத்தில் அதற்கென

கொடுக்கப்பட்ட சதுர வடிவக் கட்டங்களில் எழுதவும். பெயரின் எழுத்துக்களைக் கொடுக்கப்பட்ட அடைப்புக்குறியினுள் ⬭ நிழலிடவும், பெயரின் முதல் எழுத்தைப் பெயரின் பின்னால் எழுதி நிழலிடவும். முதல் கட்டத்திலிருந்தே எழுத ஆரம்பிக்கவும். முனைவர்/திரு./திருமதி/செல்வி போன்ற மதிப்புப் பெயரடைகளை எழுதக்கூடாது. உங்கள் பெயருக்கும், முதல் எழுத்துக்குமிடையே ஒரு புள்ளி வைக்கவும்.

**Applicant's Name:** Write your name in CAPITAL letters as given in your SSLC / Matriculation Certificate in the boxes provided and shade the corresponding alphabets given in the oval. ⬭ Start from the first box itself. Do not write Dr./Mr./Ms./Mrs. etc. Put the dot in the box between your name and your initial.

2. ***விண்ணப்ப எண்:*** *விண்ணப்ப எண் உங்களது விண்ணப்பப் படிவத்தில் பட்டைக்குறி முறையைப் பயன்படுத்தி அச்சிடப்பட்டுள்ளது.*

**Application Number:** Application Number in your application is printed in the Bar Coding System.

3. ***பயிற்றுமொழி :*** *பி.எட். கல்வி, தமிழ் அல்லது ஆங்கில பயிற்றுமொழி சேர்க்கைக்கு தங்கள் விருப்பத்திற்கேற்ப ஏதேனும் ஒன்றினை மட்டும் தேர்வுசெய்து அடைப்புக்குறியினுள் ⬭ நிழலிடவும். தாங்கள் அவ்வாறு ஏதேனும் ஒரு பயிற்றுமொழியை நிழலிடாமல் விட்டால், தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.*

**Medium of Instruction:** Make your choice of your medium of instruction and shade only one medium in the corresponding oval ⬭. If the medium of instruction is not shaded, your application will be rejected.

4. ***பிறந்த நாள்:*** *பிறந்த நாளை அதற்கெனக் கொடுக்கப்பட்ட கட்டங்களில் எழுதி, கொடுக்கப்பட்ட அடைப்புக்குறியினுள்⬭பொருத்தமான எண்களில் நிழலிடவும்.*

**Date of Birth:** Write your date of birth in the boxes provided and shade the corresponding numeral given in the oval ⬭ .

5. ***பாலினம்:*** *சரியான பாலினத்தை கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள் ⬭ நிழலிடவும்.*

**Gender:** Shade the appropriate oval ⬭ against your corresponding Gender.

6. ***சாதி:*** *தங்களது சாதிக்குரிய இடத்தில் கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள் ⬭ நிழலிடவும். அவ்வாறு நிழலிடத் தவறினால், நீங்கள் இதர வகுப்பினராகக் (OC) கருதப்படுவீர்கள்.*

**Community:** Shade the appropriate oval ⬭ against your corresponding community. If you fail to shade the community, you will be considered as OC.

7. ***சிறப்புப் பிரிவினர் :*** *மாற்றுத்திறனாளிகள் அல்லது முன்னாள் இராணுவத்தினராக இருப்பின் அதற்குரிய இடத்தில் கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள்* ⬭ *நிழலிடவும்.*

**Special Category :** Shade the appropriate oval ⬭ against your corresponding Special Category - Physically Handicapped (PH) or Ex-Servicemen.

8. ***பெயர் மற்றும் தொடர்பு முகவரி:*** *விண்ணப்பதாரர் பெயர், தகவல் தொடர்பிற்கான முகவரி, அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் தொலைபேசி எண்ணை பெரிய எழுத்தால் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கருப்புநிற பந்துமுனைப் பேனாவால் தெளிவாக எழுதவும். விண்ணப்பதாரரின் முகவரியை உறுதியாக மாற்ற இயலாது.*

**Name and address for Communication :** Write applicant's name and mailing address in CAPITAL letters with Pin-code in the space provided for this purpose. Use a Black Ball-point pen for writing the address clearly. The change of address is not allowed.

9. ***நிழற்படம் :*** *விண்ணப்பபடிவத்தில் 4 X 5 செ.மீ. அளவுள்ள தங்கள் வண்ண நிழற்படத்தை ஒட்டவும். இந்த நிழற்படத்தில் சான்றொப்பம் பெறவேண்டாம். தாள்செருகுகுழை கொண்டு நிழற்படத்தை இணைக்கவேண்டாம்.*

**Photograph :** Paste firmly your recent colour photograph with 4cm X 5cm size in the original OMR coding sheet. Do not get this photograph attested. Do not staple it.

10. ***விண்ணப்பதாரரின் கையொப்பம்:*** *விண்ணப்பதாரரின் முழுக் கையொப்பத்தைக் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தினுள் இடவும்.*

**Signature of the Applicant:** Put your full signature within the box provided.

11. ***பள்ளிப்படிப்பு:*** *10-வது மற்றும் 12-வது வகுப்பில் பெற்ற மதிப்பெண் சதவிகிதத்தை அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எண்களால் எழுதி நிழலிடவும்.*

**School Education:** Write your 10th and 12th Std. percentage of marks in the respective spaces and shade.

12. ***ஆசிரியர் பட்டயப் படிப்பு:*** *ஆசிரியர் பட்டயப் படிப்பில் பெற்ற மதிப்பெண் சதவிகிதத்தை, அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எண்களால் எழுதி நிழலிடவும்.*

**Diploma in Teacher Education (D.T.Ed.):** Write your D.T.Ed. percentage of marks in the respective spaces and shade.

13. ***இளநிலை பட்டப்படிப்பு:*** *தங்களின் இளநிலைப் பட்டப்படிப்பின் பெயர் மற்றும் குறியீட்டு எண்ணை எழுதி (இணைப்பு - I ல் காண்க) பொருத்தமான அடைப்புக் குறியில் நிழலிடவும்.* (e.g. B.A. History/ B.Sc. Chemistry / B.Com., etc.) *மேலும், இளநிலைப்பட்டத்தின் பகுதி* III *இல் உள்ள பாடங்களின் மதிப்பெண்*

*சதவிகிதத்தைக் கணக்கிட்டு (தமிழ்/ஆங்கிலம் இலக்கியம் நீங்கலாக) அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எண்களால் எழுதி, பொருத்தமான அடைப்புக்குறியில் ⬭ நிழலிடவும். மதிப்பெண் சதவிகிதத்தை முதல் இரண்டு கட்டத்திலும், தசம எண்ணை அடுத்த இரண்டு கட்டத்திலும் எழுதவும்.*

**Under Graduate Degree (UG):** Write the name of your UG degree in the given space (e.g. B.A. History / B.Sc. Chemistry / B.Com., etc.) with the corresponding subject code (see Annexure-I) and shade in the given space. Further, average percentage of marks of part III in UG degree (except B.Lit. Tamil/English) should be calculated and shaded in the appropriate oval ⬭. Whole numbers are to be written in the first two boxes and the decimals in the second two boxes after the dot.

*14.* ***முதுநிலை பட்டப்படிப்பு:*** *தங்களின் முதுநிலைப் பட்டப்படிப்பின் பெயர் மற்றும் குறியீட்டு எண்ணை எழுதி, (இணைப்பு - I ல் காண்க) பொருத்தமான அடைப்புக் குறியில் நிழலிடவும். மேலும், முதுநிலைப் பட்டத்தில் பெற்ற மதிப்பெண் சதவிகிதத்தைக் கணக்கிட்டு அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எண்களால் எழுதி,* (e.g. M.A. English / M.Sc. Physics / M.Com., etc.) *பொருத்தமான அடைப்புக்குறியில் ⬭ நிழலிடவும். மதிப்பெண் சதவிகிதத்தை முதல் இரண்டு கட்டத்திலும், தசம எண்ணை அடுத்த இரண்டு கட்டத்திலும் எழுதவும்.*

**Post Graduate Degree (PG):** Write the name of your PG degree in the given space (e.g. M.A. English / M.Sc. Physics / M.Com., etc.) with the corresponding subject code (see Annexure-I) and shade in the given space. Further, average percentage of marks in PG degree should be calculated and shaded in the appropriate oval ⬭. Whole numbers are to be written in the first two boxes and the decimals in the second two boxes after the dot.

*15.* ***அதிகபட்ச கல்வித்தகுதி:*** *நீங்கள் நிறைஞர் /முனைவர் பட்டம் பெற்றவராயிருப்பின், பொருத்தமான கட்டத்தை நிழலிடவும். மேலும், அந்தப் பாடத்தின் பெயரைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதவும்.*

**Highest Educational Qualification:** If you are a M.Phil. / Ph.D. Degree holder, then shade the boxes and write the subject in the space provided.

*16.* ***ஆசிரியப்பணி அனுபவம் :*** *தங்களுக்கு ஆசிரியப்பணி அனுபவம் இருப்பின், தங்களது பணி அனுபவத்தை நிறைவு பெற்ற ஆண்டுகளில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எண்களால் எழுதி, பொருத்தமான அடைப்புக்குறியில் ⬭ நிழலிடவும். அனுபவம் இல்லையெனில் நிழலிடத் தேவையில்லை.*

**Teaching Experience in completed years:** If you have teaching experience, write your completed No. of years in the box provided and shade the corresponding numeral in the ⬭ oval . If no experience, the boxes need not be filled.

17. அ) நாட்டு நலப்பணித் திட்ட சான்றிதழ் இருப்பின் 'ஆம்' என்ற அடைப்பை நிழலிடவும்.

ஆ) தேசிய மாணவர் படை சான்றிதழ் இருப்பின் 'ஆம்' என்ற அடைப்பை நிழலிடவும்.

இ) விளையாட்டு சான்றிதழ் இருப்பின் 'ஆம்' என்ற அடைப்பை நிழலிடவும்.

a) If you possess N.C.C. certificate, shade the bracket 'yes'.

b) If you possess N.S.S. certificate, shade the bracket 'yes'.

c) If you possess sports certificate, shade the bracket 'yes'.

18. ***உறுதிமொழி :*** உறுதிமொழியைப் படித்தபின் தங்களது முழுக் கையொப்பத்தைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் இடவும். இடம் மற்றும் நாள் ஆகியவற்றை தவறாமல் எழுதவும்.

**Declaration:** Put your full signature in the space provided after reading the declaration. Don't forget to write place and date.

19. ***ஆசிரியர் பணிஅனுபவச் சான்றிதழ்:*** தங்களது முழுநேர பணிஅனுபவச் சான்றிதழில் தேவையான விவரங்களைக் குறிப்பிட்டு, கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் பள்ளித் தலைமையாசிரியர்/முதல்வர் கையொப்பம், பள்ளி அலுவலக முத்திரை, நாள் ஆகியவற்றை கண்டிப்பாக பெற்றிருத்தல் வேண்டும். தனியாக இணைக்கப்படும் பணிஅனுபவச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**In-Service Certificate:** The Head of the Institution should provide the details of your current experience and sign in the space provided for this purpose along with school seal and date. Otherwise the application will be definitely rejected. Separate Teaching experience certificate will not be accepted.

## 11 ***முக்கிய அறிவுறுத்தல்கள்*** (Important Instructions)

1. பூர்த்திசெய்த விண்ணப்பங்களை பல்கலைக்கழக அலுவலகத்திற்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும்.

Filled-in applications should be sent to the University official address only.

2. சாதி குறிப்பிடப்படவில்லை எனில் விண்ணப்பம் இதர வகுப்பினருக்கான (OC) இடஒதுக்கீட்டின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

If community is not mentioned, your application will be considered under OC category.

3. பி.எட். படிப்புக்கு மாணவர்களின் சேர்க்கை மற்றும் கல்வி மைய ஒதுக்கீடு, அவர்கள் இளநிலைப் பட்டத்தில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் (தரவரிசைப்படி), பிற முன்னுரிமைக் கூறுகளின் அடிப்படையிலும், தமிழக அரசின் இடஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்றியும் மட்டுமே நடைபெறும்.

Selection for admission into B.Ed. Programme and allotment of Study Centres will be made only based on the marks obtained in the UG degree (rank list), other preference criteria and also following the community reservation policy of Government of Tamil Nadu during admission counselling.

4. *ஏதாவது காரணங்களுக்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட கல்விமையங்கள் செயல்படவில்லை எனில், மாணவர்களைப் பிற கல்விமையங்களுக்கு மாற்ற பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.*

If for any reason, the identified Programme Study Centres are cancelled, then the University has got the right to shift the students to a suitable Programme Study Centre.

5. *பி.எட். படிப்புக்கு தமிழ் மற்றும் ஆங்கில பயிற்றுமொழிக்கு ஒரே விண்ணப்பம் வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.*

Application is common for both English and Tamil medium of B.Ed. Programme. The candidate has to select any one of the medium, either English or Tamil.

6. *கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத மாணவர்கள் தங்களது சேர்க்கைக்கு உரிமைகோரும் தகுதி இழப்பர்.*

Those who do not report themselves on the day of the Admission Counselling Session will forfeit their claim for a seat.

7. *பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பி.எட். படிப்புகளுக்கு விண்ணப்பிக்க இயலாது.*

Other State candidates are not eligible for applying B.Ed.

8. *தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பி.எட். சேர்க்கை தகுதிக்கூறுகளின் அடிப்படையில் மட்டுமே நடைபெறுகிறது. விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளின்படி சேர்க்கைக்கான தகுதிகள் முழுமையையும் நிறைவு செய்த பின்னரே பி.எட். படிப்பில் அனுமதிக்கப்படுவார்கள். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாளன்று விண்ணப்பதாரர்கள் தகுதி வரம்புகளின்படி தகுதியற்றவர்களாக இருந்தால் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். சேர்க்கை குறித்து தனியார் நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் தவறான வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம் என விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.*

Tamil Nadu Open University B.Ed. admissions are made strictly only on the basis of merits. Only those candidates who satisfy the eligibility criteria fixed by the University will be admitted. Candidates will not be admitted if they are not eligible as per the eligibility criteria as on the last date of submission of the filled-in application form. The candidates should not be misled by false promises for admission made by the private institutions or individuals.

## ANNEXURE-I

**பாடக் குறியீடு (Subject Code)**

**அட்டவணை - அ (Table-A)**

| **பாடம் (இளநிலை பட்டம்)** Subject (Graduate Level) | **குறியீட்டு எண்** |
|---|---|
| தமிழ் / தமிழ் இலக்கியம் (Tamil / Tamil Literature) | 10 |
| ஆங்கிலம் /ஆங்கில கணினி பயன்பாடு / பயன்முறை ஆங்கிலம் (English / English Computer Application / Functional English) | *11* |
| கணிதம் / பயன்பாட்டுக் கணிதம் / புள்ளியியல் (Mathematics / Applied Mathematics / Stastistics) | 12 |
| இயற்பியல் / பயன்பாட்டு இயற்பியல் / புவியியற்பியல் / உயிர் இயற்பியல் / மின்னணுவியல் / தொழிற்சாலை மின்னணுவியல் (Physics / Applied Physics / Geo-Physics / Bio-Physics / Electronics / Industrial Electronics) | *13* |
| வேதியியல் / உயிர் வேதியியல் / பயன்பாட்டு வேதியியல் (Chemistry / Bio-Chemistry / Applied Chemistry) | 14 |
| தாவரவியல் / சுற்றுச்சூழல் அறிவியல் / சுற்றுச்சூழல் விலங்கியல் / சுற்றுச்சூழல் உயிரியல் / உயிர் நுட்பவியல் / தாவர உயிரியியல் / தாவர உயிர் தொழிற்நுட்பவியல் (Botany / Environmental Science / Environmental Zoology / Environmental Biology / Bio-Technology / Plant Biology / Plant Bio-Technology) | *15* |
| விலங்கியல் / நுண்உயிரியியல் (Zoology / Micro Biology) | 16 |
| வரலாறு (History) | 17 |
| புவியியல் / பயன்பாட்டுப் புவியியல் (Geography / Applied Geography) | 18 |
| கணினி அறிவியல் / கணினி பயன்பாடு / தகவல் தொழில்நுட்பம் (Computer Science / Computer Applications / Information Technology) | 19 |

**அட்டவணை - ஆ (Table -B)**

| **பாடம் (முதுநிலை பட்டம்)** **Subject (PG Level)** | **குறியீட்டு எண்** |
|---|---|
| பொருளாதாரம் (Economics) | 20 |
| வணிகவியல் (Commerce) | 21 |
| மனையியல் (Home Science) | 22 |
| அரசியல் அறிவியல் (Political Science) | 23 |
| சமூகவியல் (Sociology) | 24 |
| உளவியல் (Psychology) | 25 |
| தத்துவவியல் (Philosphy) | 26 |
| தர்க்கம் (Logic) | 27 |
| இந்திய கலாச்சாரம் (Indian Culture) | 28 |

தங்களது பாடக் குறியீட்டு எண்ணை ⬭ அதற்குரிய இடத்தில் நிழலிடவும்

Shade the appropriate Oval ⬭ and write the corresponding subject code.